திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 15.03.2026

## உறவுகள்..!

ஒரு அப்பாவும், மகனும் அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டிற்கு விருந்திற்குப் போனார்கள்.
விருந்திற்கு முன்பாக தேநீர் வழங்கப்படுகிறது. அதை, அப்பா கையில் எடுப்பதற்கு முன்பு தேநீர் கோப்பை தவறி கீழே விழுந்து உடைந்து விடுகின்றது.

அந்த சப்தம் கேட்டு அப்பாவின் நண்பர் வெளியே வந்து அதை பார்த்து," அழகான சீன கோப்பை இது. எவ்வாறு உடைந்தது?" என்று ஆதங்கமாக கேட்டார்.

" எனது கை தவறி கீழே விழுந்து உடைந்து விட்டது" என அப்பா வருத்தம் தோய்ந்த குரலில் சொல்லவே.

அப்பாவின் நண்பர் உடைந்த பீங்கான்களை அள்ளிக் கொண்டு சென்றார்.

இதை கண்ட மகன் அப்பாவிடம் கேட்டான், " உங்கள் கை கோப்பையில் படவே இல்லையே.. பின்பு ஏன் நீங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொண்டீர்கள்? "

" உண்மைதான். தேநீர் கோப்பையைக் கொண்டு வந்தது நண்பரின் மகள். அவள் கவனமாக அதை மேசை மீது வைக்கவில்லை. ஆகவே, அது தவறி விழுந்துவிட்டது.
இந்த உண்மையைச் சொன்னால், நண்பர் ஏற்றுக்கொள்வாரா.. என் மீது சந்தேகப்பட வாய்ப்பு உள்ளது. அதற்கு பதிலாக செய்யாத குற்றத்தை ஏற்றுக்கொண்டு விடுவதே சரி என நினைத்தேன்.

ஒருவேளை இந்த உண்மைக்கு நீதான் சாட்சி என விளக்கிச் சொல்லி இருந்தால், அவர் தன் மகளைக் கோபித்துக் கொண்டிருப்பார். அதன் பிறகு அவரது மகளுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும்.

மெல்ல எங்கள் நட்பில் விரிசல் ஏற்பட்டுவிடும். உறவுகள் உடைபடாமல் காப்பாற்ற இப்படி சிறு பொய்கள் தேவைப்படவே செய்கின்றன " என்று சிறு புன்னகையோடு சொன்னார் அப்பா.

அப்பாவின் வாழ்க்கை அனுபவம்தான் அவரை இந்த முடிவு எடுக்கச் செய்திருக்கிறது.

வாழ்க்கை நமக்கு கற்றுத் தரும் பாடம் இது போன்றது தானே ...

உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது எளிது.

காப்பாற்றிக் கொள்வது அவ்வளவு எளிதல்ல.

விட்டுக் கொடுத்தலும், புரிந்து கொள்ளுதலும், அரவணைத்து போதலும் அத்தியாவசியமானது.